உ

சிவமயம்



இணுவில் - கோண்டாவில்

# காரைக்கால் சிவன்கோயில்
# வரலாறும்

## விஸ்வநாதசிவன்
# திருவூஞ்சலும்

ஆக்கியோன்:
சைவப்புலவர் திரு. சு. செல்லத்துரை

வெளியீடு:
இசை நடன கிராமிய கலைக் கல்லூரி
இணுவில்

வெளியீடு - 5

பதிப்பு - 1969

பதிப்புரிமை:

இணுவில் இசை நடன கிராமிய கலைக்கல்லூரி

# முன்னுரை

"இந்தப் பூமி சிவனுய்யக் கொள்கின்ற ஆறு" என்பது மணிவாசகப் பெருமான் வாக்கு. இது அருமருந்தன்ன பொன்னுன வாக்கு. பிறந்து வளர்ந்து உண்டு உறங்கி மீண்டும் மீண்டும் இதனையே செய்வதற்கு வழி தேடி வினைசேர்த்துக், குளிக்கப்போய்ச் சேறு பூசியவன் நிலைபோலாகின்றது நம்வாழ்வு. ஏன் பிறந்தோம்? ஏன் கற்ருேம்? ஏன் வாழ்கின்ருேம்? என்பதை அறியாது, சிந்திக்காது வாழ்வை வீணாக்கி மடிகின்ருேம். பிறவியின் பயன் இறைவனை அடைதல், கற்றதன் பயன் கடவுளைத் தொழுதல், வாழ்வின் பயன் வற்ருத பேரின்பத்துக்கு வழிதேடல், எனும் உண்மையை உணர வைக்கவே இறைவன் துன்பத்தைத் தருகின்ருன் 'சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும், துன்பம் சுடச்சுட நோற்கிற்பவர்க்கு' என்பது பொய்யா மொழியாரின் பொன்னுன வாக்கன்ருே. 'நல்ல குருநாதன் நம்மை வருத்துவது கொல்லவல்லக் கொல்லவல்லப் பொல்லா வினை தீர்க்க, என்பதும் இவ்வுண்மையையே புணர்த்தா நிற்கின்றது. உயிர் செய்யும் வினை எக்காலமும் அதனை விட்டு நீங்காது தொடரும். அதனை அனுபவித்தே தீர்க்க வேண்டும். ஆயினும் இறைவன் அருள் பெற்ருல் அது தானுகவே வெயிலவனைக் கண்ட பனிபோல விலகிவிடும். அதனுலே இறைவன் அருள்புரியும் இடங்களையறிந்து 'அவனருளாலே அவன்தாள் வணங்கி, வினையின் பிணிப்பில் நின்று விடுதலை பெற்று, ஈறிலாப் பெருவாழ்வாம் வீட்டின்பம் பெறுதல் வேண்டும். வெம்மைதரு பிணியகற்றும் காரைக்கால் பதியின் செம்மையறிந்து - மாருத வினைவலியால் வருந்துபவர் எல்லோரும், தீராத நோயுடனே பிறவிப் பிணியும் நீங்கிப் பேரின்பப் பெருவாழ்வு பெறல் வேண்டுமெனும் பெருநோக்காலே திரு

வருள் சித்தத்தில் இந்நூல் எழுதப்பெற்றது. கற்றதன் பயனாய்க் கடவுளைத் தொழுது, வாழ்வின் பயனாய் வற்றாத பேரின்பத்துக்கு வழிதேடிப், பிறவியின் பயனாய் இறைவனை அடைந்து எல்லோரும் இன்புற்றிருக்க அம்மையப்பன் அருள்புரிவாராக.

"தமிழில்லம்"<br>
இணுவில் கிழக்கு, | சு. செல்லத்துரை<br>
இணுவில். | 20-7-69 | இளவாலை

*வினைவலி மிகவெனை வாட்டுதம்மா என்றன்*<br>
*வேதனை தீர்த்தருள் வேதவதி*

*தினமுனை நினைந்துளம் உருகுகின்றேன் என்றன்*<br>
*தீவினை தீர்ப்பதுன் பாரமம்மா*

*கனவிலும் நனவிலும் உன்நினைவு மனக்*<br>
*கருவினில் உறைவதும் உன் உருவு*<br>
*மனதினில் அறிவொளி ஏற்றிடுவாய்மன*<br>
*மாயையின் இருளினைப் போக்கிடுவாய்*

*சொல்லிலும் செயலிலும் வல்லமைதா*<br>
*தூய்மையும் துணிவும் துலங்கிடவே*<br>
*நல்லதை எண்ணிடும் நல்வரம்தா*<br>
*ஞானச் சுடர்விழி நாரணியே*

*இம்மையில் தீவினை செய்ததில்லை*<br>
*எவ்விதமோ துயர் சூழுதம்மா*<br>
*அம்மையே அடைக்கலம் தந்துவிடு*<br>
*அருளுருவாய் எனை ஆள்பவளே.*

சு. செ.

# பதிப்புரை

அணுவி லணுவாகி யுலகனைத்து முவப்பூட்டி
அணுகுபவர் மனதிற்கலை அழகொளிரும் தாயே
இணுவிலிசை நடனகிரா மியகலைக் கல்லூரி
நுணுகிவளர் கலைக்கோயிற் கொலுவி லுறைவாயே,

சமயப் பணியில் எமது கல்லூரி ஆற்றிய சீரிய பணிகளில் தலைசிறந்ததாகக் கருதப்படுவது இப்பணி ஒன்றே என்று துணிந்து கூறலாம். நாம் இதுவரை திருவருள் துணைகொண்டு வெளியிட்ட பாமாலைகளின் வரிசையில் மலர்ந்ததே இத்திருவூஞ்சல் பாமாலை. காரைக்கால் சிவன் திருவுளமிரங்கி, திரு. க. அம்பலவாணர் (சாமியார்) அவர்கள் அனுமதி தந்ததும்; சைவப்புலவர் திரு.சு.செல்லத்துரை அவர்களின் தூய சிந்தையில் திருவூஞ்சல் மலர்ந்ததும் பல்லோரும் படித்தேத்த நூலுருவாக்கி நாம் தந்ததும் சித்த மிசை குடிகொண்ட சிவன் செயலன்றி நம் செயல் அன்று.

ஆண்டவன் அளித்த தெய்வீகக் கலைகளை போதிக்கும் எமது கல்லூரி இறையருள் போற்றும் இனிய பணிகளைச் செய்ய முயன்றபோது

"எற்றைக்கும் ஏழ் ஏழ்
பிறவிக்கும் உன் தன்னோடு
உற்றோமே ஆவோம்
உனக்கே நாம் ஆட்செய்வோம்" என்று வேண்டிக்கொண்டோம். அந்த வேண்டுகோள் இப்படி ஒரு திவ்விய பணியாய் மலர இறையருள் புரிந்திருக்கின்றமை எமது கல்லூரியின் பாக்கியமே.

வேண்டுவார் வேண்டுவதை ஈயும் காரைக்கால் விஸ்வநாதசிவனுர்க்கு 'திருவூஞ்சல்' வேண்டும் என்று சாமியா

ரின் மனதில் தோன்றிய எண்ணத்தை நிறைவேற்றி வைக்க சிவன் திருவுளம் கொண்ட காரணத்தால் இன்று நூலுருவில் 'திருவூஞ்சல்' திகழ்கின்றது.

நல்லதே எண்ணி நல்லதே செய்து பழக்கப்பட்ட எமது கல்லூரி சாமியாருடைய ஆலோசனையும், அனுமதியும் பெற்று சைவப் புலவர் சு. செல்லத்துரை ஆக்கியருளிய காரைக்கால் வரலாறும் திருவூஞ்சலும் எனும் இந்நூலை வெளியிடுவதில் பெருமையடைகின்றது, நன்றி கூறுகின்றது.

இந்நூலை இலவச வெளியீடாக அளிக்கவே விரும்பினோம். ஆனாலும் ஆலயத் திருப்பணி நடைபெற்றுக் கொண்டிருக்கும் நல்ல தருணத்தில் நாம் இதை வெளியிடுவதால் 'திருவூஞ்சல்' பாமாலை திருப்பணிக்கு உதவட்டுமே என்று எண்ணினோம்.

ஆகவே இந்நூல் விற்றுவரும் தொகை முழுவதும் காரைக்கால் சிவாலயத் திருப்பணிக்கே உரித்துடைய தாக்கியுள்ளோம்.

அன்புறு சிந்தைய ராகி யடியவர்
நன்புறு நல்லூர்ப் பெருமண மேவிநின்று
இன்புறும் எந்தை இணையடியேத்துவார்
துன்புறு வாரல்லர் தொண்டு செய்வாரே.

கே. எஸ். ஆனந்தன்
*தலைவர்*

தி. சி. சண்முகலிங்கம்
*கௌரவ செயலாளர்*

இசை நடன கிராமியக்
கலைக் கல்லூரி,
இணுவில்.
20-7-69

# இணுவில் — கோண்டாவில்
# காரைக்கால் சிவன்கோயில்
# வரலாறு

இறைவன் சிவாலயங்களில் உள்ள திருமேனிகளிடத்தும், சிவனடியாரிடத்தும் எழுந்தருளியிருந்து அன்பர்களுக்கு அருள்புரிவான் என்பது ஆன்ஞேர் வாக்கு. ஈழத்தில் யாழ்ப்பாணக் குடாநாட்டின் நடுவிடத்தில் அமைந்துள்ள இணுவில் பலவித வளமும் செறிந்துள்ள ஊர். பண்டு தொட்டுச் சைவசமய ஆசார அனுட்டானம் உடையோர் வாழும் புண்ணிய பூமி. இங்குள்ள ஆலயங்களில் காரைக்கால் சிவன்கோயிலும் முக்கியமான ஒன்ருகும். இது சிவாலயங்களுக்குரிய மூர்த்தி, தல, தீர்த்த விசேடமுடையது. இவ்வாலயத்தின் வரலாற்றில் உண்மைச் சரித்திரத்துடன் அருள் நிகழ்ச்சிகளும் பின்னிப் பிணைந்துள்ளன. இங்கு பஞ்சலிங்க மூர்த்தமாக விஸ்வநாத சிவனும் விசாலாட்சி அம்மையும் எழுந்தருளி இருக்கப், பரிவார மூர்த்திகளாக மாரியம்மனும், விநாயகரும் முருகனும், ஞான வயிரவரும் எழுந்தருளி இருந்து அடியார் பிணியகற்றி அருள்பாலிக்கின்றனர். மேற்கு நோக்கிய இவ்வாலயத்தின் முன்புறத்தில் வேம்பும் அரசும் ஒன்ருக முளைத்துக் கிளைவிட்டுப் பெருவிருட்சங்களாகி அம்மையும் அப்பனுமாய் அமைந்திருக்கும் காட்சி மனதுக்கு ஆனந்தத்தைத் தரவல்லது.

ஆண்டுதோறும் ஆடித் திருவோணத்தைத் தீர்த்த நாளாகக் கொண்டு (கதிர்காமத் தீர்த்தத்தன்று) பத்து நாட்கள் கொடியேற்றித் திருவிழா நடைபெறுகிறது திருவிழா அபிடேகம் முதலிய விசேட காலங்களில் அன்னதானமும் வெள்ளிக்கிழமை தோறும் குழைசாதமும் அடியவர்களுக்குக் கொடுக்கப்படுகின்றது. எவ்வித பிணியாளரும் இதனை மருந்தாக எண்ணி உண்டு தமது பிணியில் நின்றும் நீங்குகின்ருர்கள். இவ்வாலயம் தோன்றுதற்கு ஏதுவான ஒரு அருள் நிகழ்ச்சியே இதற்கும் ஏதுவாகும்.

19-ம் நூற்ருண்டின் முற்பகுதியில் இணுவிலில் பெரிய 'சந்நியாசியார்' என அழைக்கப்பட்ட ஒரு அருட்பெரியார் வாழ்ந்தார். கருவிலே திருவுடைய இவருக்குப் பெற்ருர் இட்ட பிள்ளைப் பெயர் சுப்பிரமணியம் என்பதாகும். சுப்பிரமணியம் சிறுவயதினனுயிருக்கும்பொழுது தனது தந்தையாருடைய மாட்டு மந்தையை மேய்த்து வரு

வது வழக்கம். இப்போது காரைக்கால் என அழைக்கப் படும் இடம் அப்போது காரை முட்பற்றைகள் நிறைந்த காடாக இருந்தது. காரைக்காடு என அழைக்கப்பட்டது. காரைக்காடு எனும் பெயரே பிற்காலத்தில் மருவிக் காரைக் கால் ஆயிற்று. சுப்பிரமணியம் எனும் சிறுவன் மாடு களைக் காரைக்காட்டுப் பக்கத்தில் மேய்ப்பார். அவரது தாயார் தினமும் அவருக்கு அவ்விடத்தில் உணவு கொண்டு போய்க் கொடுப்பார். ஒருநாள் எக்காரணம் கொண்டோ உச்சிப் பொழுதாகியும் தாயார் உணவு கொண்டு வரவில்லை. மாடு மேய்த்த சிறுவன் பசியாற் களைப்புற்று அவ்விடத்தில் நின்ற ஆலமர நிழலில் படுத் துறங்கி விட்டான். அப்போது தாயார் வடிவுகொண்ட ஒருவர் கட்டுச் சோற்றுடன் வந்து சிறுவனை எழுப்பி உணவைக் கொடுத்தார். வழமைபோல் கொண்டு வரும் நீரைக் கொண்டு வராததால் நீர் எங்கே என்று சிறுவன் கேட்க அவன் துயில் கொண்ட இடத்தின் அருகிலேயுள்ள கற்குட்டையில் நீர் சுரந்து வரும் இடத்தைக் காட்டினார். அந்நீரிற் கைகால் கழுவி உணவையுண்டு கையலம்பி நீர் குடித்துவிட்டுத் தாயாரைத் தேடியபொழுது அவரைக் காணுமையால் சிறுவன் திகைப்படைந்தான். உடனே வீட்டுக்குச் சென்று அங்கு தாயார் இருக்கக்கண்டு தனக் குச் சொல்லாது விரைந்து வந்த காரணம் யாதெனக் கேட்டார். தாயார் எதுவும் அறியாதவராய்த் தான் அங்கு வரவில்லை என்பதைக் கூறினார். சிறுவன் நடந்ததைக் கூற இது உலக மாதாவாகிய அம்பிகையின் அருட்செய லேயென்பதை உணர்ந்தனர். அன்றே அவரது அருள் வாழ்வு மலரத் தொடங்கியது.

சிறுவன் சுப்பிரமணியத்திற்கு அன்னை அன்னபூரணி உணவூட்டிய இடத்தில் மாரியம்மனுக்குக் கோயில் எடுக் கப்பட்டது அதுவே இன்றைய காரைக்கால் சிவன் கோயிலின் வடபுறத்தில் மாரியம்மன் ஆலயமாகத் திகழ் கின்றது. அன்று நீர் சுரந்த இடம் தீர்த்த விசேடமாய் இன்று திருமஞ்சனக் கேணியாக இருக்கின்றது. அம்மையின் பெயரால் எழுந்த ஆலயம் இன்று அப்ப னின் பெயரால் காரைக்கால் சிவன் கோயில் என அழைக் கப்படுகின்றது. அன்று காரைக் காடாக, கொடிய பாம் பும் பேயும் குடிகொண்டு பயங்கரமாயிருந்த இடம் இன்று அம்மையப்பன் அருள் நிழலாய், ஆலும் மாவும் அரசும் வேம்பும் ஓங்கி வளர்ந்த பெருஞ் சோலையாய் மாறுத வெம்

பிணியால் வாடுவோர்க்குத் தஞ்சமளிக்கும் அருட்சோலை யாய்த் திகழ்கின்றது.

அன்னையின் அருள்பெற்ற சுப்பிரமணியம் அவ்விடத் திற்றுனே இருந்து மணிமந்திரப் பணிமூலம் மக்கள் பிணி யகற்றிப் 'பெரிய சந்நியாசியார்' என அழைக்கப்பட்டார். சந்நியாசியார் தமது வாழ்வில் பல அற்புதங்களை செய்த வாய்வழிச் செய்திகளை இன்றும் இணுவிலில் கேட்கலாம். இவர் இணுவில் கந்தசுவாமி கோயிலுக்கு ஒரு மஞ்சம் செய்துவிட விரும்பினுர். அவ்வெண்ணம் நிறைவேற ஆண்டவன் கனவில் தோன்றி அருள் செய்ததாகவும், இறைவனே சந்நியாசியாரின் வடிவு கொண்டு தென்னிந்தியாவிலுள்ள தேவகோட்டை முத்துக்கறுப்பன் எனும் ஆசாரி தலைமையில் தலைசிறந்த சிற்பிகளை அழைத்து வந்ததாகவும் காங்கேசன் துறையில் வந்திறங்கியபோது தம்மை அழைத்து வந்தவரைக் காணுது சிற்பிகள் பெரிய சந்நியாசியாரின் இருப்பிடத்தை விசாரித்து வந்ததாகவும், அச்செய்திகளை சந்நியாசியாருக்குக் கூற அவர் இறைவனின் அருட் குறிப்பை உணர்ந்து கலையுலகம் போற்றத்தக்க ஒரு மஞ்சத்தை உருவாக்கப் பணித்துத் தமது மனதிற்பட்ட நிய திக்குட்படவே செய்வித்து முடித்ததாகவும் இதனை நேரிற் கண்டோர் இன்றும் கூறுவர். 37 அடி உயரமுடைய இந்த மஞ்சத்தைப்போலக் கலையம்சமும், நுட்பமும் உடையது வேறெங்குமே இல்லை என்பது அறிஞர்கள், ஆராய்ச்சியாளர்கள் யாவரதும்ஒத்த முடிவாகும். இந்த மஞ்சம் புனையப்பட்ட இடமே இன்று மஞ்சத்தடி கந்தசாமி கோவிலென அழைக்கப்படுகின்றது. இணுவில் கந்தசாமி கோயிலிலிருந்து காரைக்கால் சிவன் கோயிலுக்குத் தேர் ஓடுவதற்கு முப்பத்தாறு (36) அடி அகலம் கொண்ட வீதி ஒன்று திறந்து தேரும் ஓடச் செய்தார். இன்று அவ் வழியே தேர் ஓடுவதில்லை எனினும் காரைக்கால் சிவன் கோயில் வீதியில் தேர் ஓடுகின்றது. பெரிய சந்நியாசியாரின் அருள் வாழ்வுடன் இணைந்த இணுவில் கந்தசாமி கோயிலும், மஞ்சத்தடிக் கந்தசாமி கோயிலும், காரைக்கால் சிவன் கோயிலும், வரலாற்றிலும் இணைந்துள்ளன. இணுவிலின் அருளுருவாய்த் திகழ்ந்த பெரியசந்நியாசியார் அவர்கள் இணுவிலின் நடுவிடத்தில் தோன்றிக் கீழ்த்திசையில் [காரைக்காலில்] அருள்பெற்று மேல்திசையில் (இணுவில் கந்தசாமி கோயில்) அவ்வருளால் பல

அறங்கள் புரிந்து மீண்டும் தாம் தோன்றிய சூழலிலேயே (மஞ்சத்தடி கந்தசாமி கோயில்) நிறைநிலையுற்ருர். அவர்கள்மூலம் வீசத் தொடங்கிய அருள் அலைகள் இன்னும் பல்லாண்டுகள் அவ்வூரையும் அயலூர்களையும் வாழ்விக்கும் என்பதில் ஐயமின்று. பெரிய சந்நியாசியார் அருள்பெற்ற காரைக்காலில் ஒரு அருளாளர் பரம்பரையே உருவாகி வருவதைக் காணலாம்.

அண்மைக் காலத்தில் ஈழத்தின் அருட்சோதியாகத் திகழ்ந்த யோகர் சுவாமிகள் இடையிடையே காரைக்கால் பக்கம் வந்து போனதுண்டு. எதற்காக வந்துபோனுர் என்பதை எவரும் அறிந்திலர். ஆயினும் அவ்விடத்தில் வீசும் அருளலைகளே சுவாமிகள் வந்து போனதற்குக் காரணமாயிருந்தது என்பதை உணரமுடியும். சுவாமிகளின் அருளாசி பெற்ற ஞானபண்டிதர் கொக்குவில் நடராசா வைத்தியர் அவர்களும் அருட்பணிபுரிந்து பெருஞ் சேவை செய்து ஈற்றில் சமாதிநிலையடைந்த இடமும் இதுவேயாகும். உடல்நோயுடன், உளநோயையும் நீக்கி ஆன்ம ஈடேற்றம் நல்கவல்ல 'வைத்தியர்' அவர்களின் அன்புக்கும் அருளுக்கும் பாத்திரமான திரு. கதிரித்தம்பி அம்பலவாணர் (சாமியார்) அவர்கள் இன்று காரைச்காலிலிருந்து மணிமந்திர, வைத்தியப் பணிபுரிந்து பல்லோர் பிணியகற்றும் அருளாளராய் விளங்குகின்ருர். இணுவில் கந்த சுவாமி கோயிலை ஆக்கிய திரு.கு வே. அருணுசலம் அவர்களது சந்ததியில் வந்த இவர் சிறுவனுக இருக்கும் போதே ஞானபண்டிதர் நடராச வைத்தியரால் வலிந்து ஆட்கொள்ளப்பட்டு அவரிடம் மணிமந்திர வைத்தியக் கலையைக் கற்ருர். அவரையே குருவாகக் கொண்டு காரைக்காலை இருப்பிடமாகக் கொண்டு அருட்பணியாற்றி வருகின்ருர். இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் கொடிய நோயாலும் பேயாலும் உளத் தாக்கத்தாலும் வருந்துவோர் இங்கு வந்து தங்கியிருந்து தெய்வ அருளால் சுகம் பெற்றுச் செல்கின்றனர். தீராப்பிணியகற்றும் திவ்விய இடமான காரைக்கால் இருமைப் பயனும் தரவல்ல இணையற்ற தலமாகும். இத்தலத்தின் வளர்ச்சியிலும், அருளாட்சியிலும் கோண்டாவில் மக்கள் கொண்டுள்ள ஆர்வமும் இணுவில் மக்கள் கொண்டுள்ள ஊக்கமும் எல்லையில்லாதன. இவ்விடத்தின் சிறப்பை உணர்ந்து, இறைவனருள் பெற்று எல்லோரும் இன்புற்றிருப்பார்களாக.

உ

சிவமயம்

இணுவில் — கோண்டாவில்

# காரைக்கால் விஸ்வநாதசிவன்

# திருவூஞ்சல்

## காப்பு

சிவநெறியும் செந்தமிழும் செழித்தே வாழும்
திருவிடமாம் ஈழவள நாட்டில் மேலோர்
தவவிரத சாதனையில் தலைமை பூணத்
தகுமிணுவில் கோண்டாவில் சார்ந்தே யார்க்கும்
பவமகற்றும் காரைக்கால் பதியில் தொண்டர்
பரவுவிஸ்வ நாதர்மேல் ஊஞ்சல் பாடக்
கவளமத கடகளிற்று ஞான பானு
கணபதியின் இணையடிகள் காப்பதாமே.

## நூல்

இருக்குயசுர் சாமவதர் வணநால் வேதம்
இயைந்திடுநல் வயிரமணித் தூண்கள் நாட்டி
திருத்தகுசீர் உபநிடத விட்டம் பூட்டிச்
சிந்தைமகிழ் கலைஞானக் கயிறு மாட்டிப்
பெருகுமருட் பிரணவமாம் பீட மேறி
பிரபைவிசா லாட்சியருட் சக்தி யோடு
விருதுதரு காரைக்கால் பதியில் மேவும்
விஸ்வநாத சிவனாரே ஆடீர் ஊஞ்சல்.

விரிபுவன மீதிலருள் வாழ்வு காண
விரும்புமடி யாருளமாம் கோயில் தன்னில்
சரியைகிரி யாயோக ஞான மார்க்கம்
சார்ந்திடுநாற் பாதமெனும் கால்க ளாகிக்
அரியமறை யாகமத்தை விட்ட மாக்கி
அன்புவடம் மாட்டியருட் பீட மேறி
விரிமலர்சேர் காரைக்கால் பதியில் மேவும்
விஸ்வநாத சிவனுரே ஆடீர் ஊஞ்சல்.

தும்புருநா ரதர்சாம கானம் பாடத்
தூபமிகு தீபமுடன் முனிவர் கூட
நம்பனருள் நந்திபெரு முழவு கொட்ட
நாற்றிசையும் போற்றியிசை நாத மெட்ட
உம்பரொடு அரியயனும் வடந்தொட் டாட்ட
உமைவிசா லாட்சியருட் பார்வை கூட்ட
வெம்புவினை தீர்காரைக் காலில் மேவும்
விஸ்வநாத சிவனுரே ஆடீர் ஊஞ்சல்.

ஆலமுண்டு தேவர்களுக் கமுத மூட்டி
அடியவரின் மிடியகற்றும் பாங்கு காட்டி
நீலகண்டத் தோடுமணிப் பீட மேறி
நினையுமடி யவர்துயரக் கடலை நீக்கிக்
கோலமயில் ஆடிடுமாஞ் சோலை யூடே
கொலுவிருந்தே குயில்களிசை பாட ஆடும்
வாலறிவன் காரைக்கால் பதியில் மேவும்
விஸ்வநாத சிவனுரே ஆடீர் ஊஞ்சல்.

பங்கயத்தோன் முதற்றேவர் வடந் தொட்டாட்ட
பாரளந்த மால்முதலோர் ஆல வட்டம்
செங்கரத்தி லேந்தஇரு மருங்கும் நின்றே
திருமகளும் கலைமகளும் கவரி வீச
இங்கிதமாய்க் கின்னரர்ஏழ் இசைகள் பாட
இந்திரனர் வெண்கொற்றக் குடை கவிக்க
வெங்கொடிய பிணிபோக்கும் காரைக் காலில்
விஸ்வநாத சிவனரே ஆடீர் ஊஞ்சல்.

சடையாடப் பிறையாடக் கங்கை ஆடக்
செங்கரத்தி லக்கினியும் சேர்ந்தே யாட
இடையாட மான்மழுவும் இசைந்தே யாட
எழில்மார்பில் முப்புரிநூல் இலங்கி யாட
அடையாத அருளமுதை அள்ளி யுண்ணும்
அன்பருள ஊஞ்சலிலே அசைந்தே யாடி
விடையேறி நடமாடும் காரைக் காலில்
விஸ்வநாத சிவனரே ஆடீர் ஊஞ்சல்

ஐம்பூத முதல்யாவும் ஆட ஆட
ஐந்தொழிற்கும் காரணர்கள் அவரு மாட
தும்பிமுக வேடுதம்பி முருக னாடத்
துடியிடையாள் விசாலாட்சி அம்மை யாட
நம்புமடி யவர்மிடியும் வினையு மோட
நல்லடியார் மனவூஞ்சல் மீதி லாடி
வம்புநறு மலர்ச்சோலைக் காரைக் காலில்
விஸ்வநாத சிவனரே ஆடீர் ஊஞ்சல்.

அம்மாவென் றழுமடியார் துயர்கள் தீர்க்கும்
அன்னைசிவ சக்தியருள் மாரி ஓர்பால்
இம்மைவினை வலிதீர்த்து ஞானம் நல்கும்
ஐங்கரனே டறுமுகனும் முருகனேர் பால்
வெம்புபவர் பிணிதீர்க்கச் சூல மேந்தும்
வித்தகனும் ஞானவயி ரவரும் ஓர் பால்
வெம்பகைகள் வெகுண்டோடும் காரைக் காலில்
விஸ்வநாத சிவனாரே ஆடீர் ஊஞ்சல்.

அந்தணர்கள் வேதஇசை பாடி ஏத்த
அடியவர்கள் கீதஇசை கூடி யாட
சிந்தையெலாம் சிவப்பொலிவுச் செம்மை தேக்கி
செய்வதெலாம் சிவனுக்கே சேவை யாக்கிச்
செந்தமிழ்ப்பா வலர்நிறைசொற் கவிதை பாட
தெய்வமணங் கமழிணுவைப் பதியின் கீழ்பால்
வந்தவினை வெந்துமடி காரைக் காலில்
விஸ்வநாத சிவனாரே ஆடீர் ஊஞ்சல்.

முக்கண்ணுடைப் பிரானாரே ஆடீர் ஊஞ்சல்
முழுமுதலாய் உள்ளவரே ஆடீர் ஊஞ்சல்
தக்கன்மகம் தகர்த்தவரே ஆடீர் ஊஞ்சல்
சர்வவினை தீர்ப்பவரே ஆடீர் ஊஞ்சல்
அக்கமணி மாலையினீர் ஆடீர் ஊஞ்சல்
அன்னைவிசா லாட்சியுடன் ஆடீர் ஊஞ்சல்
விக்கினங்கள் தீர்த்தருளும் காரைக் காலில்
விஸ்வநாத சிவனாரே ஆடீர் ஊஞ்சல்.

## "வாழி"

அந்தணரும் அருமறையா கமமும் வாழி
ஐந்தெழுத்தும் அருணூலும் வாழி வாழி
சிந்தை நிறை மங்கையர்கள் கற்பும் வாழி
சிவனடியார் திருக்கூட்டம் வாழி வாழி
செந்தமிழும் சிவநெறியும் சேர்ந்து வாழி
செம்மைதரு வான்மழையும் வாழி வாழி
விந்தைவிசா லாட்சியுடன் காரைக் காலில்
விஸ்வநாத சிவனும் வாழி வாழி.

## "எச்சரிக்கை"

தில்லையிலே நடமாடும் தேவே எச்சரிக்கை
செம்பவளத் திருமேனிச் செல்வா எச்சரிக்கை
எல்லையில்லா வல்லமையே எந்தாய் எச்சரிக்கை
இருவினைப் பிறப்பறுக்கும் மருந்தே எச்சரிக்கை
நல்லருட்பே ரின்பமய ரூபா எச்சரிக்கை
ஞானமய மானகண நாதா எச்சரிக்கை
வல்லபை யருள்பெருகு காரைக் காலில்
விஸ்வநாத சிவனே எச்சரிக்கை.

## "பராக்கு"

திருமருவு மிணுவை நகர்த் தேவே பராக்கு
சித்தியொடு முத்திதரு செல்வா பராக்கு
அருவுருவ மாகியருள் அமலா பராக்கு
அம்மையுமை யாளின்மண வாளா பராக்கு
அருமறை ஐம்பூதமுத லானாய் பராக்கு
அப்பனென எங்பரமும் ஈவாய் பராக்கு
விருதருறை காரைக்கால் பதியில் மேவும்
விஸ்வ நாத சிவனே பராக்கு

## "லாலி"

சொற்பதங் கடந்தவற்கு லாலி சுபலாலி
துரியாதீத மானவர்க்கு லாலி சுபலாலி
கற்பனைக் கெட்டாதவற்கு லாலி சுபலாலி
கஜமுகனைத் தந்தவற்கு லாலி சுபலாலி
சற்குருவாய் வந்தவற்கு லாலி சுபலாலி
சகலலோக நாயகனற்கு லாலி சுபலாலி
வெற்றிதரு சித்தருறை காரைக் காலில்
விஸ்வநாத சிவனுற்கு லாலி சுபலாலி.

## "மங்களம்"

தேவ தேவ சங்கரற்கு மங்களம்
தேவியுமை பாகருக்கு மங்களம்
பாவவினை அறுப்பவற்கு மங்களம்
பரமஞான சிற்பரற்கு மங்களம்
ஆலம் உகந்தவற்கு மங்களம்
அம்பல வாணருக்கு மங்களம்
சூலம் தரித்தவற்கு மங்களம்
சோதி மயமானவற்கு மங்களம்
விண்ணோர்க்கரியவற்கு மங்களம்
விரும்புமன்பர்க் கெளியவற்கு மங்களம்
கண்மூன்று டையவற்கு மங்களம்
காரைக் கால் நாதருக்கு மங்களம்
வெண்ணீறணிந் தவற்கு மங்களம்
விசாலாட்சி நாதருக்கு மங்களம்
விண்ணோர் தலைவருக்கு மங்களம்
விஸ்வநாத சிவனுற்கு மங்களம்.

வணக்கம்

இணுவில் — கோண்டாவில்
காரைக்கால் விஸ்வநாதசிவன்
திருவூஞ்சல் முற்றிற்று
சுபம்